මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date: 2024/06/16

## ஊடகச் செய்தி

## கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி பற்றிய விளக்கம்

சர்வதேச நாணய நிதியத்தின் சமீபத்திய வெளியீடான, விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய ஆவணங்கள், கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரியாக செயற்படுத்த முன்மொழியப்பட்ட சொத்து வரி பற்றிக் குறிப்பிடுகின்றன. இது தொடர்பான சில ஊகங்கள் மற்றும் தவறான கருத்துகளை தெளிவுபடுத்துவதே இந்த செய்திக்குறிப்பின் நோக்கமாகும்.

இலங்கையின் ஆழமான, சிக்கலான மற்றும் இதற்கு முன்னெப்பொழுதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, அரசாங்க வரி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். இது அதிகளவான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு வழிவகுத்ததன் விளைவாக, பொது படுகடனை நீடிக்க முடியாத அளவிற்கு அதிகரித்தது. இதன்படி, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான தீர்வு நடவடிக்கைகள் அரசாங்க வருமான அதிகரிப்பை நோக்காகக் கொண்ட முயற்சிகளை உள்ளடக்கியுள்ளன. 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.3% ஆக இருந்த இலங்கையின் அரசாங்க வருமானத்தை, 2025 ஆண்டின் இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆக அதிகரிக்கும் முயற்சியாக கடந்த இரண்டு ஆண்டுகளில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட அரசிறை வளர்ச்சி நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது. 2023 இல், வரி சீர்திருத்தங்கள் முற்போக்கான நிறுவன மற்றும் தனிநபர் வருமான வரி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியது. 2024 இல், வருமான அதிகரிப்பானது, பெரும்பாலான வரி விலக்குகளை நீக்குதல் மற்றும் வரி விகித சரிசெய்தல் உட்பட பெறுமதி சேர் வரி (VAT) சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதுவரை, 2023 ஆம் ஆண்டிற்கான வருமான இலக்குகள் பெரும்பாலும் அடையப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான இலக்கு 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.5% என்ற அளவை எட்டுவதற்கான பாதையில் உள்ளது. எனவே, மொத்த உள்நாட்டு உற்பத்தி வருமான இலக்கில் 15% ஐ எட்டுவதற்கு 2025 இல் எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வருமானத்தில் 1.5% உள்ளது. 2025 இலக்கை அடைய உதவும் என எதிர்பார்க்கப்படும் முக்கிய வருமான நடவடிக்கை சொத்து மீதான செல்வ வரி ஆகும். 2023 மார்ச்சில் சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டம் அனுமதிக்கப்பட்டதிலிருந்து, 2023, 2024 மற்றும் 2025 இல் எதிர்பார்க்கப்படும் வருமான நடவடிக்கைகள் பொதுக் களத்தில் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

உத்தேசிக்கப்பட்ட சொத்து வரி வடிவமைப்பானது இறுதிக் கட்டத்தில் உள்ளது. எனவே, விகிதங்கள் மற்றும் வரையறைகளின் குறிப்பிட்ட விவரங்களை கோடிட்டுக் காட்டுவது முடியாததாகும். இருப்பினும், இந்த வரியின் கவனம் அதிக செல்வந்தர்கள் மீது உள்ளது என்பதுடன், இது சராசரி வருமானம் ஈட்டுபவர்கள் மீதான வரி அல்ல. சமூகத்திலுள்ள செல்வந்தர்களுக்குச் சொந்தமான அதிக மதிப்புள்ள சொத்துக்கள் அல்லது அதிகளவான சொத்துக்கள் மீது வரி அறவிடுவதை உறுதிசெய்யும் வகையில் பொருத்தமான வரி விடுவிப்பு மூலம் இந்த நோக்கம் அடையப்படும். 2025 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2% மற்றும் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.4% வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் குறிப்பிட்ட இலக்கை இது நிரூபிக்கிறது.

இந்த வரி வடிவமைப்பானது இரட்டை வரிவிதிப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்புகளை சிதைக்கும் கூறுகளைத் தவிர்க்க பொருத்தமான வழிமுறைகளை உறுதி செய்யும். சொத்து வரிகள் பல நாடுகளில் (இந்தியா போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் உட்பட) செயல்படுத்தப்படுகின்றன. ஏனெனில் அவை மிகவும் திறமையான, முற்போக்கான மற்றும் பொது சேவைகளுக்கு நிதியளிப்பதற்கான வருமானத்தை உருவாக்கும் சிதைக்காத வழிமுறையாகக் கருதப்படுகின்றன.

இந்த வரியானது தேவையான சட்டத் திருத்தங்களின் வழக்கமான சட்டவாக்கச் செயன்முறையின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், 2025 ஏப்ரலில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டவாக்கச் செயன்முறை முடிவுற்றதுடன், சர்தேச நாணய நிதியத்தின் திட்ட ஆவணங்கள் வெளியிடப்பட்ட போது 2023 மார்ச்சில் முதன்முதலில் அறிவிக்கப்பட்ட உத்தேச வரி நடவடிக்கையைச் செயல்படுத்துவதற்கு, மதிப்பீட்டு வழிமுறைகள் மற்றும் தரவுத்தளங்களை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க நிர்வாக வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது. உண்மையில் இது ஒரு புதிய வரி நடவடிக்கை அல்ல. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் "நிகர வருடாந்த மதிப்பு" என அழைக்கப்படும் இதேபோன்ற வருமானக் கணக்கீட்டை உள்ளடக்கியுள்ளது. இலங்கையிலுள்ள சொத்துக்கள் உள்ளூர் அதிகாரசபை வரிகள் மற்றும் முத்திரைத் தீர்வை போன்ற நடைமுறையிலுள்ள வரிகளுக்குட்பட்டவை என்ற வகையில், அத்தகைய சொத்து வரிக்கு குறிப்பிடத்தக்க முன்னுதாரணம் உள்ளது.

அரசாங்க வருமானத்தின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினைக் குறைத்தல் என்பன பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பாக அமைகிறது. வட்டி விகிதங்களைக் குறைக்க உதவுதல் மற்றும் நாணயத்தின் மதிப்பேற்றத்துக்கு ஆதரவளித்தல் மூலம் அனைத்து பொதுமக்களுக்கும் அபிவிருத்தியைக் கொண்டுவருகிறது. பொதுச் செலவினங்களுக்கு நிதியளிக்கக்கூடிய அரசாங்க வரி வருமானத்தின் தேவையான அளவை எட்டத் தவறினால், முழு நாட்டிலும் பேரழிவுகரமான தாக்கங்களை ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்பட வழிவகுக்கும்.